ශ්‍රී ලංකා මානව හිමිකම් කොමිෂන් සභාව
இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு
Human Rights Commission of Sri Lanka

Press Statement No: HRC/PS/i/T15/10/25

பாதுகாப்பான எதிர்காலத்தை கட்டியெழுப்புதல்: சிறுவர்களின் சட்ட ரீதியான பாதுகாப்பை பலப்படுத்துதல்

அதிகரித்து வரும் சிறுவர் உரிமை மீறல்கள், குறிப்பாக உடல் ரீதியான தண்டனை வழங்கல் தொடர்பான நிகழ்வுகள் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் அவதானிக்கப்படுகின்றது. இந்த செயற்பாடுகள் ஊடாக உடல் ரீதியான தீங்குகள் மாத்திரமன்றி, நீண்டகால உணர்வு ரீதியான தீங்கும் ஏற்படுவதுடன், சில சந்தர்ப்பங்களில் அது கடுமையான அதிர்ச்சி மற்றும் தற்கொலைக்குக்கூட காரணமாகியுள்ளது.

இந்த கடுமையான நிலைமைகளுக்கு பதிலளிக்கும் வகையில் இலங்கை தண்டனைகள் சட்டக் கோவையை (அத்தியாயம் 19) திருத்துவதற்கான சட்டமூலம் 2025 யூலை 4 ஆம் திகதி வர்த்தமானியில் வெளியிடப்பட்டது. இந்த சட்டமூலம் 18 வயதுக்கு குறைந்த எந்தவொரு நபருக்கும் எதிராக உடல் ரீதியாகவும், உடல் ரீதியற்ற குரூரமான, இழிவான மற்றும் தீங்கு விளைவிக்கும் அனைத்து விதமான தண்டனைகளையும் தடை செய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

இலங்கையின் சட்டங்கள் ஏற்கனவே பிள்ளைகளின் பாதுகாப்பிற்கான வலுவான அடித்தளத்தை வழங்குகின்றன. தண்டனைச் சட்டக் கோவை மூலம் சிறுவர்களுக்கு எதிராக குரூரத்தை குற்றமொன்றாக குறிப்பிடப்பட்டுள்ளதுடன், சிறுவர்கள் கட்டளைச் சட்டத்தில் சிறுவர்களின் பராமரிப்பு மற்றும் பாதுகாப்புக்கான ஏற்பாடுகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இலங்கை அரசியலமைப்பின் 11 ஆவது உறுப்புரை ஊடாகவும், எந்தவொரு நபரும் சித்திரவதைக்கு உட்படுத்தப்படவோ அல்லது குரூரமான, மனிதாபிமானமற்ற அல்லது இழிவான கவனிப்புக்கு அல்லது தண்டனைக்கு உட்படுத்தப்படவோ கூடாது என்பதையும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அதற்கமைய, வீட்டில், பாடசாலையில், மாற்றுப் பராமரிப்பு நிலையங்களில் அல்லது நீதித்துறை சார்ந்த நிறுவனங்களில் உடல் ரீதியான தண்டனைகளை வழங்குதல் அரசியலமைப்பின் ஏற்பாடுகளுக்கு முரணானதாகும்.

இந்த சீர்திருத்தங்கள் அனைத்துப் பின்னணியிலும் உடல் ரீதியான தண்டனையை ஒழிப்பதற்கான கூட்டு முயற்சியின் ஒரு பகுதியாகப் புரிந்து கொள்ளப்படல் வேண்டும் என இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் வலியுறுத்தப்படுகின்றது. ஒழுக்கம் முக்கியமானதாக இருந்தாலும், அது பயம் அல்லது வன்முறையின் அடிப்படையில் அன்றி சிறுவர்களின் கண்ணியத்தையும் நம்பிக்கையையும் கட்டியெழுப்புகின்ற நேர்மறையான மற்றும் மரியாதைக்குரிய அணுகுமுறைகளின் அடிப்படையில் இருத்தல் வேண்டும்.

இந்த சீர்திருத்தங்களின் நோக்கத்தையும் முக்கியத்துவத்தையும் பொதுமக்கள் புரிந்துகொள்ளுதல் அவசியமாகும். சிறுவர்களைப் பாதுகாப்பதற்காக உருவாக்கப்பட்ட சட்டங்கள், உரிய கவனத்துடனும் விழிப்புணர்வுடனும் வெளிப்படையாக கலந்துரையாடப்பட வேண்டிய விடயமாகும். இருப்பினும், அவை தவறாகப் பொருள் கொள்ளப்படக் கூடாதென்பதோடு, குழப்பத்தை ஏற்படுத்துகின்ற மற்றும் பிள்ளைகளின் பாதுகாப்பை பலவீனப்படுத்துகின்ற எதிர்மறையான உரையாடலொன்றாக மாற்றப்படக் கூடாது. இத்தகைய நடவடிக்கைகள் ஊடாக இந்த சீர்திருத்தங்களைப் பாதுகாப்பதற்காக முன்வருகின்ற சிறுவர்களுக்கு தீங்கு விளைவிக்கும் ஆபத்தும் நிலவுகின்றது.

இந்த விடயத்தின் மையக் கோட்பாடு சிறுவர்களின் உச்சளவு நலனாகுமென இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு நினைவுபடுத்துகிறது. சிறுவர்களை தீங்கிலிருந்து பாதுகாத்தல் ஒரு சட்டப்பூர்வ கடமை மாத்திரமன்றி ஒரு தார்மீகக் கடமையுமாகும். முக்கிய விடயம் என்னவெனில், உடல் ரீதியான தண்டனையை ஒழித்தல் என்பது சிறுவர்கள் மீதான பெற்றோரின் அதிகாரம் அல்லது அவர்களுக்கு வழிகாட்டுவதற்கான ஆசிரியர்களின் பொறுப்பை குறைமதிப்பிற்கு உட்படுத்தாதிருப்பதாகும். அதற்காக சிறுவர்களுக்கு வழிகாட்டல் மற்றும் ஒழுக்கமான, பாதுகாப்பான, ஆக்கபூர்வமான மற்றும் பிள்ளையின் நம்பிக்கை, மரியாதையை சாதகமான விதத்தில் வன்முறையற்ற முறையில் மேற்கொள்ளப்படுவதை உறுதி செய்வதாகும். இது ஒட்டுமொத்த குடும்பம், கல்வியியலாளர்கள், கொள்கை வகுப்பாளர்கள் மற்றும் சமூகத்தால் பகிர்ந்துகொள்ளப்படுகின்ற பொறுப்பாகும்.

நீதிபதி எல்.ரீ.பி. தெஹிதெனிய
தவிசாளர்,
இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு

2025.10.15